**ஜனவரி – 29**

# TNPSC துளிகள்

- தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியான சத்யபிரதா சாஹூ, சிறப்பாக செயல்படும் மாநிலம் என்ற பிரிவின்கீழ் தேசிய விருதிற்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
  - 2021 ஆம் ஆண்டின் போது தமிழகத்தில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களின் போது தேர்தல் மேலாண்மையின் பல்வேறு பகுதிகளில் முழு அளவிலான செயல் திறன் மேற்கொள்ளப் பட்டதற்காக இந்த விருதானது வழங்கப் படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு ஆளில்லா வான்வழி வாகனக் கழகம்




- அண்ணா பல்கலைக் கழகத்தில் தமிழக மாநிலத்திற்குச் சொந்தமான ஆளில்லா விமானத் தயாரிப்புக் கழகமானது நிறுவப்பட்டுள்ளது.
- இந்தக் கழகமானது அனைத்து வகையான ஆளில்லா விமானங்களையும் அது சார்ந்த பிற அமைப்புகளையும் வடிவமைத்து, தயாரித்து அதில் வர்த்தகத்தினையும் மேற் கொள்ளும்.
- அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள சென்னைத் தொழில்நுட்ப நிறுவன வளாக விண்வெளி ஆராய்ச்சி மையமானது மாநில அரசின் நிதி உதவியுடன் ஆளில்லா விமானங்களைத் தயாரித்து வருகிறது.

## துணிச்சல்மிக்க நபர்களுக்கு அண்ணா வீரதீர விருதுகள்

- காவல்துறையினர் மற்றும் பொது மக்களுக்கான விருதுகள் என்ற பிரிவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா வீரதீர விருதுகளை வழங்கினார்.
- நிவர் புயலின் போது சென்னை ஓட்டேரியில் சிதிலமடைந்த ஒரு வீட்டிலிருந்து கணேஷ் என்ற ஒரு ஓவியரைக் காப்பாற்றிய ஆய்வாளர் ராஜேஸ்வரிக்கு இந்த விருது வழங்கப் பட்டது.
- வெள்ளத்தில் மூழ்கி தத்தளித்த இரு சிறுவர்களை மீட்ட விழுப்புரம் மாவட்டத்தின் தீயணைப்பாளர் M. இராஜீவ் காந்திக்கு இந்த விருதானது வழங்கப் பட்டது.

- இரண்டு காட்டு யானைகளை வெற்றிகரமாக மயக்க மருந்தின் மூலம் கட்டுக்குள் கொண்டு வந்து பல உயிர்களைக் காப்பாற்றிய வனக் கால்நடை உதவி அறுவைச் சிகிச்சை நிபுணரான டாக்டர் K. அசோகனுக்கு வீரப் பதக்கம் வழங்கப் பட்டது.
- வாய்க்காலில் தவறி விழுந்த 5 நபர்களின் உயிரைக் காப்பாற்றிய, சிவகங்கையைச் சேர்ந்த முத்து கிருஷ்ணனுக்கு இந்த விருது வழங்கப் பட்டது.
- கிணற்றில் விழுந்த 4 ஆம் வகுப்பு மாணவரைக் காப்பாற்றிய திருச்சியைச் சேர்ந்த 9 வயது சந்திரசேகரனுக்கு இந்த விருது வழங்கப் பட்டது.
- நீரில் மூழ்கித் தத்தளித்த 5 பள்ளி மாணவர்களைக் காப்பாற்றிய திருப்பூரைச் சேர்ந்த சொக்கநாதன் மற்றும் சுதா ஆகியோருக்கும் இந்த விருதுகள் வழங்கப் பட்டன.
- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் ஒரு கட்டிடம் இடிந்து விழும் முன்பாக அதனுள் இருந்த நபர்களை எச்சரித்து அவர்களை வெளியேற்றியதற்காக திருவொற்றியூரைச் சேர்ந்த M. தனியரசுவிற்கு இந்த விருது வழங்கப் பட்டது.
- சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த C. ராமசாமி என்பவருக்கு மிக அதிக அளவில் நெல் சாகுபடியைச் செய்ததற்காக (ஹெக்டேருக்கு 13,800 கி.கி) வேண்டி C. நாராயணசாமி நாயுடு விருதானது வழங்கப் பட்டது.
- கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் சிறப்பாக பணியாற்றியக் காவலர்களுக்கு காந்தி அடிகள் என்ற காவல் பதக்கமானது வழங்கப் பட்டது.
- திருப்பூர் தெற்கு, திருவண்ணாமலை தாலுக்கா மற்றும் மதுரை அண்ணா நகர் ஆகிய காவல் நிலையங்கள் மாநிலத்தில் முறையே முதல், இரண்டு மற்றும் மூன்றாவது இடங்களுக்கான சிறந்த காவல் நிலையங்களாகத் தேர்வு செய்யப் பட்டன.



## அறிஞர்களுக்கு விருதுகள்

- தமிழ்மொழியின் மேம்பாட்டிற்குப் பங்காற்றிய அறிஞர்கள், அமைப்புகள் மற்றும் ஊடகங்களுக்கு 2021 ஆம் ஆண்டிற்கான விருதுகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.
- இந்த ஆண்டு பரிசுத் தொகையானது தலா 1 லட்சம் ரூபாயிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.
- விருது பெறுபவர்களுக்கு ஒரு தங்கப் பதக்கம், ஒரு சால்வை மற்றும் ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்படும்.

- விருது பெற்றவர்களின் பெயர் பட்டியல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா விருது – நாஞ்சில் சம்பத்
மகாகவி பாரதியார் விருது – பாரதி கிருஷ்ணகுமார்
பாவேந்தர் பாரதிதாசன் விருது – புலவர் செந்தலை கவுதமன்
சொல்லின் செல்வர் விருது – சூர்யா சேவியர்
சிங்காரவேலர் விருது – கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம்
தமிழ்த்தாய் விருது – மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு.
அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் இரா.
சஞ்சீவிராயர்

சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது – உயிர்மை
திங்களிதழுக்கும்
தேவநேயப்பாவாணர் விருது – முனைவர் கு. அரசேந்திரன்
உமறுப்புலவர் விருது – நா. மம்மது
கி.ஆ.பெ. விருது – முனைவர் ம. இராசேந்திரன்,
கம்பர் விருது – பாரதி பாஸ்கர்
ஜி.யு.போப் விருது – ஏ.எஸ். பன்னீர்செல்வம்
மறைமலையடிகள் விருது – சுகி.சிவம்
இளங்கோவடிகள் விருது – நெல்லைக் கண்ணன்
அயோத்திதாசப் பண்டிதர் விருது – ஞான. அலாய்சியஸ்

## தமிழ்நாடு குடியரசு தின அணிவகுப்பு



- ஒட்டு மொத்த குடியரசு தின அணிவகுப்பின் தளபதியாக படைத் தளபதி அனுஜ் குப்தா செயலாற்றினார்.
- தமிழ்நாடு குடியரசு தின அணிவகுப்பில் 3 காட்சிப் பீடங்கள் காட்சிப்படுத்தப் பட்டன.

### *முதல் காட்சிப் பீடம்*

- 3 காட்சிப் பீடங்களில் முதல் பீடமானது 1806 ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலூர் கலகத்தின் நிகழ்வுகளைச் சித்தரித்தது.
- மேலும் அதில்,

- ஆங்கிலேயருடன் போரிட்டு தனது அரசை மீட்டெடுத்த ஒரே அரசியான வேலு நாச்சியார்.
- கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆயுதக் கிடங்கு மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு தற்கொலைப் படைத் தாக்குதலில் தனக்குத் தானே தீ வைத்துக் கொண்ட பெண் வீராங்கனை குயிலி.
- ஆங்கிலேயர்களுக்கு எதிராக சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த வீரபாண்டியக் கட்ட பொம்மன்.
- வீரபாண்டியக் கட்டபொம்மனின் படைத் தளபதியான வீரன் சுந்தரலிங்கம்.
- தனியாக சண்டையிட்டு ஆங்கிலேயப் படையை அழித்த ஒண்டி வீரன்.
- இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முதன்முறையாக வெள்ளையனே வெளியேறு எனக் குரல் கொடுத்த பூலித் தேவன்.
- ஆங்கிலேயர்களுக்கு வரி செலுத்துவதை எதிர்த்த வீரன் அழகு முத்துக் கோன்.
- மருது சகோதரர்களால் வழிபடப்பட்டு ஆதரிக்கப் பட்ட காளையார் கோவில் ஆகியவையும் இடம் பெற்றன.

***இரண்டாவது காட்சிப் பீடம்***

- இரண்டாவது காட்சிப் பீடத்தில், மகாகவி பாரதியார், வ.உ. சிதம்பரனார், சுப்ரமணிய சிவா மற்றும் சீர்திருத்தவாதி விஜயராகவாச்சாரியார் ஆகியோரின் உருவங்கள் இடம் பெற்றிருந்தன.

***மூன்றாவது காட்சிப் பீடம்***

- சமூகச் சீர்திருத்தம், பெண் விடுதலை, தீண்டாமை ஒழிப்பிற்காகப் போராடிய தந்தை பெரியார்.
- சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த இதர தமிழக தலைவர்கள் : இராஜாஜி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், இரட்டைமலை சீனிவாசன், வாஞ்சிநாதன், தீரன் சின்னமலை, வ.வே.சு. ஐயர், காயிதே மில்லத், J.C. குமரப்பா மற்றும் கக்கன் ஆகியோரின் உருவங்கள் இடம் பெற்றிருந்தன.

## ராமச்சந்திரன் நாகசாமி



- பழம்பெரும் தொல்லியல் ஆய்வாளரும், கல்வெட்டு அறிஞருமான ராமச்சந்திரன்

நாகசாமி தனது 91வது வயதில் சென்னையில் காலமானார்.

- இவர் தமிழக அரசின் தொல்லியல் துறையில் ஒரு இயக்குநராகப் பணியாற்றியவர் ஆவார்.
- இவர் மகாபலிபுரத்திலுள்ள சிற்பங்கள் குறித்த இவரது கல்வெட்டு ஆராய்ச்சிக்காக புகழ் பெற்றவராவார்.
- இவர் தமிழ் இலக்கியம் குறித்து பல புத்தகங்களை எழுதியுள்ளார்.
- தொல்லியல் துறையில் இவர் மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணிக்காக 2018 ஆம் ஆண்டில் இவருக்கு பத்மபூசன் விருதானது வழங்கப் பட்டது.
- இவர் தமிழக அரசின் உயரிய குடிமை விருதான கலைமாமணி விருதினையும் பெற்றவர் ஆவார்.

# தேசியச் செய்திகள்

## குடியரசு தின காட்சிப் பீடம் – 2022




- புதுடெல்லியில் உள்ள ராஜ்பாத் எனுமிடத்தில் குடியரசு தினக் கொண்டாட்டம் மற்றும் அணி வகுப்பு நடத்தப் பட்டன.
- இந்த ஆண்டு 12 மாநிலங்களின் காட்சிப் பீடங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டன.
- அருணாச்சலப் பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர், கோவா, குஜராத், ஜம்மு & காஷ்மீர், கர்நாடகா, மகாராஷ்டிரா, மேகாலயா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தர காண்ட் ஆகிய மாநிலங்களின் காட்சிப் பீடங்கள் இந்த ஆண்டு அணிவகுப்பில் காட்சிப் படுத்தப் பட்டன.
- கூடுதலாக மத்திய அரசின் 9 அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் காட்சிப் பீடங்கள்

இந்த ஆண்டு அணி வகுப்பில் பங்கேற்றன.

- வான்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் காட்சிப் பீடமானது முதல்முறையாக குடியரசு தின அணிவகுப்பில் இடம்பெற்றது.
- இந்த காட்சிப் பீடத்தின் கருத்துருவானது, "உடான்-உடே தேஷ் கா ஆம் நாக்ரிக்" (Udaan - Ude Desh ka Aam Naagrik) என்பதாகும்.

## ஊழல் கண்ணோட்டக் குறியீடு

| List of India's Rank Different Index 2021-22: | Rank |
|---|---|
| Global Drug Policy Index 2021: | 18th |
| Climate Change Performance Index 2022: | 10th |
| 2021 TRACE global Bribery Risk Rankings: | 82nd |
| World Talent Ranking report 2021: | 56th |
| Global Health Security Index 2021: | 66th |
| 5th Truecaller's Global Spam & Scam Report 2021: | 4th |
| Hurun's Global Unicorn Index 2021: | 3rd |
| "2019 Anti-Doping Rule Violations (ADRVs) Report: | 3rd |
| Henley Passport index 2022: | 83rd |

- சர்வதேச வெளிப்படைத் தன்மை என்ற நிறுவனமானது 2021 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டினை வெளியிட்டுள்ளது.
- இதில் இந்தியா 85வது இடத்தினை (40 மதிப்புகளுடன்) பெற்றுள்ளது.
- இத்தரவரிசையில் டென்மார்க், பின்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் ஒரு சேர (88 மதிப்புகளுடன்) முதலிடத்தைப் பெற்றுள்ளன.
- ஒவ்வொரு நாட்டின் பொதுத் துறையும் எந்த அளவு ஊழல் நிறைந்ததாகக் கருதப் படுகிறது என்பதை இந்தத் தரவரிசை மதிப்பிடுகிறது.
- இந்த மதிப்பீட்டின் முடிவுகள் 0 (அதிக ஊழல்) முதல் 100 (ஊழல் அற்ற நாடு) வரையிலான அளவீட்டில் வழங்கப் படுகின்றன.
- இந்தத் தரவரிசையில் 180 நாடுகள் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

## இந்தியாவின் முதல் ரஃபேல் பெண் விமானி

- பெண் விமானி சிவாங்கி சிங், இந்தியாவின் முதல் பெண் ரஃபேல் விமானி ஆவார்.
- இவர் குடியரசு தினக் கொண்டாட்டங்களில் இந்திய விமானப் படை காட்சிப் பீடத்தில் அங்கம் வகித்தார்.
- இவர் 2017 ஆம் ஆண்டில் இந்திய விமானப் படையில் இணைந்தார்.
- இந்திய விமானப் படையின் காட்சிப் பீடத்தில் பங்கேற்ற 2வது பெண் விமானியும் இவரே ஆவார்.
- இந்திய விமானப் படையின் காட்சிப் பீடத்தில் பங்கேற்ற முதல் பெண் போர் விமானி

பாவ்னா காந்த் ஆவார்.

- சிவாங்கி சிங் பீகாரில் பிறந்தவர் ஆவார்.
- 2022 ஆம் ஆண்டு இந்திய விமானப் படையின் கருத்துரு, "எதிர்காலத்திற்கு ஏற்ப மாறி வரும் இந்திய விமானப் படை" (Indian Air Force Transforming for the future) என்பதாகும்.



## சர்வதேசச் செய்திகள்

### நோர்டிக் நாடுகளின் "கிளிங்கர் படகுகள்"

- ஐக்கிய நாடுகளின் கலாச்சார நிறுவனமான யுனெஸ்கோ நிறுவனம், நோர்டிக் நாடுகளின் "கிளிங்கர் ரக படகுகளை" தனது பாரம்பரியப் பட்டியலில் சேர்த்துள்ளது.
- மரத்தாலான பாய்மரப் படகான இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல கண்டங்கள் மற்றும் கடல்களுக்கிடையில், வட ஐரோப்பிய மக்கள் தங்களது தாக்கம், வர்த்தகம், மற்றும் சில நேரங்களில் போர் நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பரப்பிட வழி வகை செய்தன.
- டென்மார்க், ஐஸ்லாந்து, சுவீடன், பின்லாந்து மற்றும் நார்வே ஆகிய நாடுகள் இணைந்து யுனேஸ்கோவின் இந்த அங்கீகாரத்தைக் கோரின.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★